# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

.*********************.

## <u>இலங்கையின் கடல் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக டோனியர் விமானத்தை பரிசளித்த இந்தியா</u>

கட்டுநாயக்காவில் உள்ள இலங்கை விமானப்படைத் தளத்தில் 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில், இலங்கையின் கடல் பாதுகாப்பினை வலுவாக்கும் நோக்கத்துடன் கடல் பாதுகாப்புசார் கண்காணிப்பு விமானமான டோனியர் இந்தியாவால் பரிசளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் பயிற்சியினை பெற்ற இலங்கை கடற்படை மற்றும் விமானப்படையைச் சேர்ந்த வீரர்கள் இந்த விமானத்தை இயக்குவதற்கான திறனைப் பெற்றிருக்கின்றார்கள். அதேவேளை தமது இந்திய சகபாடிகளிடமிருந்தும் அவர்கள் இதற்கான ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

2. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி மேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னே, இந்திய கடற்படையின் துணைப் பிரதானி வைஸ் அட்மிரல் எஸ்.என் கோர்மேட், பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இலங்கையின் இராணுவ, கடற்படை மற்றும் விமானப் படை ஆகியவற்றின் பிரதானிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவு கொண்டாட்டங்களுக்கு சமாந்தரமாக இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

3. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் நடைபெறும் ஆட்கடத்தல்கள், போதைப்பொருள் கடத்தல், மற்றும் ஏனைய திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் உள்ளிட்ட பல்வேறு சவால்களை வினைத்திறன் மிக்கவகையில் இலங்கை முறியடிப்பதற்கான பலமடங்கு சக்தியை வழங்கி இந்த விமானம் உறுதுணையாக செயற்படும். இலங்கையின் கடல்சார் பாதுகாப்பின் தற்போதைய சவால்களைக் கவனத்தில்கொண்டு உரிய தருணத்தில் இந்த விமானம் சேவையில் இணைக்கப்படுகின்றது.

4. தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இவ்விமானத்தின் மூலமாக மக்களுக்கான நேரடி பயன்பாடுகள் மேலும் அதிகரிக்கப்படுகின்றன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இலங்கை மேலும் பல பங்களிப்புகளை வழங்குவதற்கு இலங்கை மக்களுக்கான இந்த பரிசு வாய்ப்பினை வழங்குகின்றது. கொழும்பு பாதுகாப்பு குழுமத்தின் மிகவும்

முக்கியமான அம்சமாக கடல் பாதுகாப்பு அடையாளம் காணப்பட்டுள்ளமை இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்டப்படவேண்டிய முக்கிய விடயமாகும். இந்நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய இலங்கை மக்களின் முன்னேற்றம் மற்றும் செழுமைக்கான அமைதியான ஒரு சூழலை உருவாக்குவதில் இந்த விமானம் முக்கிய பங்காற்றுமென குறிப்பிட்டிருந்தார்.

5. இந்த டோனியர் விமானம் பரிசாக வழங்கப்பட்டமையானது, கடல் மார்க்கமாக மிகவும் நெருங்கிய அயல்நாடுகளான இந்தியா - இலங்கை இடையில் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் துறைகளில் காணப்படும் ஒத்துழைப்பினை சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற சாகர் கோட்பாட்டின் நோக்கினை நனவாக்குவதற்கு இலங்கைக்கு மேலதிக திறனையும் ஆளுமையையும் சேர்ப்பதற்கு இவ்வாறான ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

(2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி வெளியுறவுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலிருந்து இதற்கான உள்ளீடுகள் பெறப்பட்டன)

******

**கொழும்பு**
**15 ஆகஸ்ட் 2022**

Video Link :
https://drive.google.com/file/d/11j_DmzNf2tJIutFsSq_sWM56iVhQoQ1i/view?usp=sharing